அசல் வழக்கு எண். **478/2018,** பி.வா.சா.**2,** ராஜகோபால் , த/பெ. சன்னாசி

தேதி **24.10.2024**

<u>குறுக்கு விசாரணை</u> **:**

வாதி கண்ணகியை எனக்கு தெரியும். வாதி கண்ணகி பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வாதி எத்தனை சொத்துகளுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஒரே ஒரு சொத்திற்காக தாக்கல் செய்துள்ளார். எந்த சர்வே எண்ணிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.327 ஆகும். யார் என்னை கீரமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றார் என்றால் நான்தான் 1ஆம் பிரதிவாதி கனகாம்பாளுக்கு இடம் கிரயம் வாங்குவதறக்கா கந்தையா என்பவரை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றேன். ரெங்கநாதான் என்பவர் எங்களுடன் வந்திருந்தாரா என்றால் வரவில்லை. 1ஆம் பிரதிவாதி கனகாம்பாளின் கணவர் ரெங்கநாதன் ஏற்கனவே பெரியசாமி, செல்லையா ஆகியோரிடம் பணம் கொடுத்துவிட்டதாக என்னிடம் சொன்னாரா என்றால் ரெங்கநாதான் யாருக்கும் பணம் கொடுக்கவில்லை அவர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவும் இல்லை . 1ஆம் பிரதிவாதி கனகாம்பாள் மட்டுமே வந்தார்.

2. ரெங்கநாதனுக்கும் கனகாம்பாளுக்கும் எப்போது திருமணம் நடந்தது என்று தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. ரெங்கநாதனுக்கு இரண்டு சகோதரர்கள் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். அவர்களது பெயர் தெரியுமா என்றால் ஒருவர் பெயர் நல்லையா, மற்றொருவர் பெயர் தெரியாது. ரெங்கநாதன் எங்கு கூட்டு குடும்பபமாக வசித்தார் என்று தெரியுமா என்றால் அவர் எங்கும் கூட்டுகுடும்பமாக வசிக்கவில்லை. வழக்கு சொத்தின் பட்டா தற்போது யார் பெயரில் உள்ளது என்று தெரியுமா என்றால் கனகாம்பாள் பெயரில் இருந்தது . தற்போது 3ஆம் பிரதிவாதி கவிதா பெயரில் உள்ளது. 1ஆம் பிரதிவாதி கனகாம்பாள் 3ஆம் பிரதிவாதி கவிதா பெயருக்கு என்ன பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் கிரய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். வழக்கு சொத்துக்களை 1ஆம் பிரதிவாதி கனகாம்பாள் சித்துகாடு கிராமத்தில் இருக்கும் பழனியப்பா செட்டியார் மகன்கள் பெரியசாமி, மற்றும் செல்லையாவிடம் கிரயம் வாங்கியதாக முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ளேன். மேற்படி பழனியப்பா செட்டியார் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

3. 1ஆம் பிரதிவாதி கனகாம்பாள் வழக்கு சொத்தினை கிரயம் வாங்கும்போது யார் பெயரில் சொத்து இருந்தது என்றால் பெரியசாமி, செல்லையா ஆகியோர் பெயரில் சொத்து இருந்தது. நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் 1ஆம் பிரதிவாதி கனகாம்பாள் சித்துகாடு கிராமத்தில் இருக்கும் பழனியப்பா செட்டியார் மகன்களிடம் வழக்கு சொத்தினை கிரயம் வாங்கியதாக சொல்லி இருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. 3ஆம் பிரதிவாதி கவிதாவிடம் 5ஆம் பிரதிவாதி கவிதா கிரய வாங்கிய பத்திரத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கிரயம் எப்போது நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள மரங்களை வாதி கண்ணகி,1ஆம் பிரதிவாதி கனகாம்பாள் ஆகியோரும் வைத்து வளர்த்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

4. 1ஆம் பிரதிவாதி கனகாம்பாள் கிரயம் வாங்கும்போது யார் பெரியசாமி, செல்லையாவிற்கு பணம் கொடுத்து என்றால் நான்தான் பணம் கொடுத்தேன். சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியே வைத்து பணம் கொடுத்தேனா அல்லது உள்ளே வைத்து கொடுத்தேனா என்றால் வெளியே வைத்துதான் கொடுத்தேன். 1ஆம் பிரதிவாதி கனகாம்பாள் தனது மகளான 3ஆம் பிரதிவாதி கவிதாவின் பெயருக்கு வழக்கு சொத்தை பொறுத்து எந்த பத்திரம் எழுதி கொடுக்க அவருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 5ஆம் பிரதிவாதி கவிதா வழக்கு சொத்தினை அனுபவம் செய்வதாக நான் சொல்லியுள்ளது உண்மை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதி கண்ணகிக்கு பாகம் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. நான் முதல் விசாரணையில் சொல்லியிருப்பது பொய்யான சங்கதிகள் என்றும், வாதி கண்ணகிக்கு பாகஉரிமை உள்ளது என்றும், அதனை தடுப்பதற்காக 5ஆம் பிரதிவாதி கவிதாவிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சம்பந்தமாக எந்த விவரம் தெரியாது என்றால் சரியல்ல.